**எம்பிலிபிட்டிய நகர சபை – 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எம்பிலிபிடிய நகர சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று,காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர கட்டளை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) உப பரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபாய்.13,027,436 கூட்டுத் தொகையான 04 உழவு இயந்திரங்கள், மோட்டார் ரேடர் மற்றும் வாசிகசாலை புத்தகங்கள் நடைமுறை அல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்படாது குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் இது திருத்தப்படும் என்பது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 வண்டிகள் மற்றும் வாசகசாலை புத்தகங்களின் பெறுமதி ரூபாய்.372,725 இனால் அதிகரித்து நடைமுறை அல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் இது திருத்தப்படும் என்பது. | - மேற்படி - |
| (இ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதிய கடன் கணக்கில் 2022 டிசம்பர் 31ஆம் தேதியில் உள்ளபடியான மீதி ரூபாய்.5,147,338 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த கடன் வட்டியை தனியாக காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வேறுபாட்டுக் கான காரணங்கள் இனங்காணப் பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 - 2020 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபாய். 681,567 தொகையான முற்பணங்கள் நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத முற்பணங்களில் ரூபாய். 25,357 பதிவழிப்பதற்காக ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஏனைய முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,452,472 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,169,228 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 18,303,000 | 19,456,728 | 13,686,874 | 61,541,824 | 18,423,000 | 17,927,025 | 15,839,898 | 49,786,646 |
| வாடகை | 25,334,200 | 11,746,140 | 13,042,383 | 6,131,941 | 25,194,400 | 12,877,972 | 9,775,534 | 8,459,378 |
| அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 3,156,500 | 1,891,797 | 1,766,796 | 589,000 | 3,256,000 | 1,892,179 | 1,752,679 | 2,923,402 |
| ஏனைய வருமானங்கள் | 10,089,700 | 7,390,232 | 6,924,468 | - | 9,479,700 | 6,068,539 | 6,065,539 | - |
| | 56,883,400 | 40,484,897 | 35,420,521 | 68,262,765 | 56,353,100 | 38,765,715 | 33,433,650 | 61,169,426 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியாக 05 வருடங்களை விட பழமையான ரூபாய்.49,747,851 ஆன வீதவரி மீதி ஒன்று நிலவியது. | நிலுவை அறவிடுவதற்கு இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டவாறு உள்ளது. பின்னர் நகர சபை கட்டளைகள் சட்டத்தின் 170 ஆம் பிரிவிற்கமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 வருடங்களில் ரூபாய்.156,000 ஆன நிலுவை காணிகள் மற்றும் கட்டிட குத்தகை மீதி ஒன்று நிலவியது. | நிலுவை குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 03 முதல் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட கடை வாடகை ரூபாய்.3,843,893 மற்றும் முற்கொடுப்பனவு பணம் (Key Money) ரூபாய்.1,281,200 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் அதிகார பிரதேசத்தில் 285 மொத்த முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கையில் 283 முச்சக்கர வண்டிகள் 2022 ஆம் ஆண்டிற்காக ரூபாய்.141,500 ஆன கட்டணத்தை செலுத்தி இருக்கவில்லை. அவ்வாறே 2022 ஆம் ஆண்டு உள்ளடங்களாக கடந்த 04 ஆண்டுகளுக்கு ரூபாய்.541,000 ஆன கட்டணங்கள் நிலுவையாக காணப்பட்டன. முச்சக்கர வண்டி சங்கங்கள் மற்றும் நகர சபை ஆகியவற்றுக்கு இடையே இடம்பெற்ற அனைத்து கலந்துரையாடல்களும் திட்டவட்டமான இணக்கப்பாடின்றி நிறைவடைந்திருந்தமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | மதிப்பீடுகளை தயாரிப்பதில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக நிலுவைத் தொகை அதிகமாக காண்பிக்கப்படுகின்றது. முச்சக்கர வண்டிகளின் சங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு நாளாவதுவரையாக்கப்பட்ட பதிவேடுகளுக்கமைய கணக்குகளை திருத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | LED அறிவித்தல் பலகை ஒன்று 2019 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு ரூபாய்.2,689,200 ஆன அந்த செலவினம் 20 மாதங்களில் தீர்ப்பனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அறிவித்தல் பலகையை நிறுவி 34 மாதங்களில் கிடைத்த வருமானம் ரூபாய்.35,500 மாத்திரம் ஆகும். | இந்த அறிவித்தல் பலகை குத்தகை வழங்குவதற்கு விலைக்கேள்வி கோரப்பட்ட போதிலும் எவரும் முன்வரவில்லை. 2023 ஆம் ஆண்டிற்காக திறந்த விலைக்கேள்வி கோரப்பட்டு குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு போதிய பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் நடத்தப்பட்ட 04 களியாட்ட நிகழ்வுகளுக்கு அதன் உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நுழைவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு களியாட்ட வரியாக ரூபாய்.246,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த களியாட்டங்களில் விற்பனையான உள்ளபடியான நுழைவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடைமுறையொன்று சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | களியாட்ட வரியினை அறவிடுவது நடைமுறையில் மிகவும் கடினமாக காணப்படுகிறது. முறைகேடுகள் தொடர்பில் முறையிடப்பட்டால் வைப்பு சபைக்கு சொந்தமாக்கப்படும். எதிர்காலத்தில் உச்ச அளவில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அத்துமீறிய கட்டுமானங்களை இனங்காணுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று இல்லாதிருந்ததுடன் மக்களின் முறைப்பாடுகளில் அடிப்படையில் மாத்திரம் அத்துமீறிய கட்டுமானங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறே அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. | கட்டுமானங்களை அகற்றும் போது பல்வேறு பிரச்சனைகள் உருவாகியது. அதனால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அறிவுரை ஆலோசனை கோரப்பட்ட போதிலும் இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. | அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உக்காத கழிவுகள் பெருமளவில் சுற்றாடலுக்கு பாதகம் ஏற்படுத்தும் வகையில் நாளாந்தம் அகற்றப்பட்டிருந்தது. உக்காத கழிவு மத்திய நிலையத்திற்கு 2022 ஜுலை மாதத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபாய்.950,000 தொகையான பிராய்லர் இயந்திரம் 2022 டிசம்பர் மாதம் வரையிலும் | பொருளாதார மற்றும் சுகாதார இடர்பாடு காரணமாக எதிர்பார்த்த வருமானம் ஈட்ட முடியாதிருந்தது. கூட்டெரு உற்பத்தியை அதிகரிப்பதற்கு மற்றும் பிராய்லர் இயந்திரத்தினை பயன்படுத்துவது நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | முறையான திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

பயன்படுத்தப்படாத காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் 164,280 கிலோகிராம் எடையுள்ள கூட்டெரு தயாரிப்பு 2022 ஆம் ஆண்டில் 6,240 கிலோகிராம்கள் வரை குறைவடைந்திருந்ததுடன் விற்பனை வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபாய்.1,580,400 இனால் குறைவடைந்திருந்தது.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அம்பிலிபிட்டிய உடகம என்னும் இடத்தில் அமைந்துள்ள மல்வத்த காணியில் 0.1285 ஹெக்டேயர்கள் பரப்பளவான நிலப்பரப்பின் எல்லைகளை தீர்மானித்திராமை மற்றும் சபைக்கு சொந்தமான காணி ஒன்றாக காட்சிப்படுத்தாமை ஆகியவற்றால் அத்து மீறிய கையகப்படுத்தலுக்கு உள்ளாகும் அபாயம் ஒன்று நிலவியது. | எல்லைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் நிலவுகை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |